**செ.வெ.எண்: 219** **நாள்: 11.04.2025**

## புதுக்கோட்டை மாவட்டம்
### பத்திரிகைச் செய்தி

---

புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வருவாய் கோட்டம், பொன்னமராவதி வட்டத்தில் எதிர்வரும் **16.04.2025** புதன்கிழமை அன்று புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ் களஆய்வு மேற்கொள்ளப்பட உள்ளது. பொதுமக்கள் தங்கள் கோரிக்கை தொடர்பாக மனுக்களை **16.04.2025** பிற்பகல் 2.30 மணிக்கு பொன்னமராவதி வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நடத்தப்படவுள்ள கலந்தாய்வு கூட்டத்தின்போதும், குறுவட்டம் தோறும் முற்பகல் 9.00 மணி முதல் வருவாய் ஆய்வாளர் அலுவலகத்தில் நடத்தப்பட உள்ள பட்டா மாறுதல் முகாமிலும் மனுக்களை அளித்து பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**

புதுக்கோட்டை மாவட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிந்துக்கொள்ள:

Pro Pudukkottai PRO PDKT @PRO_Pudukkottai Pro.Pudukkottai